# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.47/2023** **நாள் : 22.06.2023**

## நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுடன் ஒருங்கிணைந்து பொதுமக்கள் பயன் பெறும் வகையில் பணியாற்றிட வேண்டும்.

## மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் அறிவுறுத்தல்

இன்று (22.06.2023) மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், சென்னை கலைவாணர் அரங்கத்தில் அனைத்து மாநகராட்சி ஆணையாளர்கள், நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சி செயல் இயக்குநர்களுக்கு, தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தம்), 2022 மற்றும் விதிகள், 2023 தொடர்பான பயிலரங்கத்தினை தொடங்கி வைத்தார்கள்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998க்கான (திருத்தம்), 2022 சட்டம் 11 பகுதிகளாகவும் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான விதிகள் 2023, 13 பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளுக்கான அனைத்து வரன்முறைகளும் உள்ளடக்கியதாக வகுக்கப்பட்டுள்ளது.

இவற்றில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு எல்லை வரையறைகள், தேர்தல் விதி முறைகள் மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் செயல்படுவதற்கான சட்டம் மற்றும் விதி முறைகள்,

உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பங்கீடு, உள்ளாட்சி அமைப்புகளின் வரி வருவாய், உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்படுகின்ற பல்வேறு உரிமங்கள் ஆகியவற்றிர்க்கான விதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களுக்கான விதி முறைகள், விளம்பர பலகைகள் மற்றும் பதாகைகள் ஆகியன உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குள் நிறுவப்படுவதற்கான விதி முறைகள், கட்டட விதி முறைகள், குடிநீர் மற்றும் கழிவுநீர் மேம்பாட்டு செயல்பாடுகள் குறித்த சட்டங்கள் மற்றும் விதி முறைகள், பொது சுகாதாரம் மற்றும் திடக் கழிவு மேலாண்மைக்கான சட்டம் மற்றும் விதி முறைகள், கசடு கழிவு மேலாண்மைக்கான சட்டம் மற்றும் விதி முறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டிற்கென நிறைவேற்றப்படக் கூடிய துணை விதிகள் ஆகியன குறித்து அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட உள்ளது.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளும் சட்ட விதிகளுக்கு உட்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் தமிழ்நாடு அரசிற்கு பெருமை சேர்க்கும் வகையிலும், பொதுமக்களின் பாராட்டுதல்களை பெறும் வகையில் இருக்க வேண்டும். அரசின் அனைத்து திட்டங்களும் சரியான வகையில் பொதுமக்களை சென்றடைய வேண்டும். நகராட்சி நிருவாகத் துறையில் பணியாற்றும் அலுவலர்கள் இதற்காக எந்தவித சமரசமும் இல்லாமல் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அலுவலர்களுக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்பினையும் நகராட்சி நிருவாகத் துறை நிச்சயமாக வழங்கும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக அதிக நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளார்கள். சுமார், 16 ஆயிரம் கோடி பல்வேறு திட்டங்களுக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி, கூடுதலாக குடிநீர் திட்டப் பணிகள், கழிவுநீர் கட்டமைப்புகள் உருவாக்குதல் போன்றவைகளுக்காக தனியாக நிதி ஒதுக்கீடும் அளித்துள்ளார்கள். எனவே, வழங்கப்பட்ட நிதி ஆதாரங்களைக் கொண்டு உரிய சட்ட விதிகளின்கீழ் அனைத்து பணிகளையும் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் அனைத்தும் உரிய நடைமுறைகளைப் பின்பற்றியே இருக்க வேண்டும். இதற்காக உரிய சட்ட விதிகள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதை அனைவரும் சரியான புரிதலோடு செயல்படுத்த வேண்டும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் அனைத்து நிலை அலுவலர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளோடு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். அப்பொழுதுதான் அரசினுடைய நோக்கமும், திட்டங்களும் பொதுமக்களை சரியாக சென்றடையும். இதை அனைவரும் கடைபிடிக்க வேண்டும். இச்சட்ட விதிமுறைகள் கடந்த 10 மாதங்களாக தயாரிக்கப்பட்டு சட்டத் துறையின் அனுமதி பெற்று வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்ப்பதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கைகளை 3 மாத காலத்திற்குள் அரசிற்கு சமர்ப்பித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இச்சட்ட விதிகளை பார்வையிட்ட பிற மாநிலத்தினர்கள் பாராட்டி வருகின்றார்கள். இதன்மூலம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக இப்பயிற்சி 21 மாநகராட்சி ஆணையாளர்கள், 138 நகராட்சி ஆணையாளர்கள், 490 பேரூராட்சி செயல் அலுவலர்கள், நகராட்சி நிர்வாகத்தின் மண்டல இயக்குநர்கள், மண்டல செயற்பொறியாளர்கள், மாநகராட்சி/நகராட்சி தலைமைப் பொறியாளர்கள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள பொறியாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இப்பயிற்சியில் வழங்கப்படும் விவரங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, 10 ஆயிரம் பொறியாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. இதற்கு அனைத்து அலுவலர்களும் ஒத்துழைப்பு வழங்கி அரசின் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப.,

சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.இரா.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., பேரூராட்சிகள் இயக்குநர் திரு.கிரண் குராலா, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இயக்குநர் திரு.ப.பொன்னையா, இ.ஆ.ப., மற்றும் அனைத்து மாநகராட்சி/நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள், பொறியாளர்கள் உள்பட பல்வேறு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்